بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் 16.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நான் கடந்த நாட்களில் ஹாலந்தில் இருந்தேன். அங்கு ஒரு மண்டல பத்திரிகைகளில் எழுதக்கூடிய ஒரு பத்திரிகை எழுத்தாளர் உள்ளார். இவர்களிடமிருந்து தேசிய பத்திரிகையும் கட்டுரைகளைப் பெறுகிறது. அவர் என்னிடம் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் எல்லாரையும் விட அதிகமாக முன்னேறக்கூடிய ஜமாஅத்தா? என்று கேட்டார். நான் அவரிடம் உலகளாவிய ஜமாஅத் என்ற ரீதியில் பார்த்தோம் என்றால் நிச்சயமாக அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் எல்லாரையும் விட அதிகமாக முன்னேறக்கூடிய ஜமாஅத் ஆகும் என கூறினேன். மேலும் இந்த விஷயத்தை நம்மைச் சாராதவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களது பார்வை நமது ஜமாஅத்தின் மீது இருக்கின்றது. இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உண்மைக்கு மிகப்பெரிய ஆதாரமாகும். இந்தியாவில் ஒரு சிறிய கிராமத்திலிருந்து எழக்கூடிய குரல் இன்று உலகில் அனைத்து ஊர்களிலும், கிராமங்களிலும் எதிரொலிக்கின்றது. மேலும், நாம் அந்த நேரத்தில் ஒரு சாதாரண மனிதனுடைய சிந்தனையில் கூட அஹ்மதிய்யா ஜமாஅத் உலகளவில் அறியப்படும் என கருத முடியாத நேரத்தை எண்ணிப் பார்க்கும் போது அதன் தனிச்சிறப்பு வெளிப்படுகின்றது. இன்னும் அதிகமாக பிரகாசிக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தனது எழுத்துக்களிலும் கூற்றுகளிலும் மிகவும் தெளிவாக இவ்வாறு கூறினார்கள்: ஒரு காலம் வரும். அப்போது உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத் அறியப்படும். மேலும் அது பரவுவது ஓர் அடையாளமாகும். அல்லாஹ்வின் ஆதரவுக்கான அடையாளமுமாகும்.

எனவே, நாம் இந்த நம்பிக்கையில்தான் நிலைபெற்றிருக்கின்றோம். நிச்சயமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது உண்மையான நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் இந்த விஷயத்தின் மீது நிலைபெற்றிருக்கின்றனர். அதாவது, எவ்வாறு அல்லாஹ் வெறும் 125 வருடங்களுக்கு முன்பு ஒரு சிறிய, தொலைதூரப் பகுதியிலிருந்து எழுந்த குரலை உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரப்ப மட்டும் செய்யவில்லை. மாறாக, தூய்மையானவர்களுடைய ஜமாஅத்தையும் நிறுவிக் கொண்டே செல்கின்றான். அந்த ஜமாஅத் அன்னாருடன் கலப்பற்ற விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் முன்னேறிக் கொண்டே செல்கிறது. அந்த இறைவன் தனது அருளால் இன்ஷா அல்லாஹ் அன்னாருடைய இந்த விஷயத்தையும் நிறைவேற்றுவான். அதாவது கஷ்டங்கள் விலகி விடும். மேலும் இந்த ஜமாஅத் அனைத்தின் மீதும் வெற்றி பெறும்.

இன்றைய நாட்களில் நாம் இந்த ஜமாஅத் உலகில் பரவிக் கொண்டிருக்கக்கூடிய காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். மேலும் இந்த படிப்படியான முன்னேற்றம் உலகிற்கு தென்படவும் செய்கின்றது. அவ்வாறு இருப்பதால் தான் அந்த பத்திரிகையாளர் என்னிடம் இந்த ஜமாஅத் உலகில் அனைத்தையும் விட அதிகமாக பரவக்கூடிய ஜமாஅத்தா? எனக் கேட்டுள்ளார். மேலும் பல இடங்களில் அஹ்மதி அல்லாதவர்கள் இந்த கேள்வியைக் கேட்கவும் செய்கின்றனர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மிக வேகமாக பரவக்கூடிய ஜமாஅத் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

இந்த வகையில் சோதனைகளும் கூடவே வருகின்றன. ஆனால் எதிரிகளுடைய எண்ணத்தையும், முயற்சியையும் பார்த்தீர்கள் என்றால் இந்த கஷ்டங்கள் ஒன்றுமே அல்ல. மேலும் ஒவ்வொரு சோதனையும் அஹ்மதியின் மீது அஹ்மதிய்யத்தின் காரணமாக தனிப்பட்ட முறையில் இருந்தாலும் சரி அல்லது சில இடங்களில் முழு ஜமாஅத்தும் இந்த கஷ்டத்தை கடக்கின்றது என்றாலும் சரி ஒவ்வொரு கஷ்டமும் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் வல்லமையை வெளிப்படுத்துகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்றைய நாட்களில் கனவு மற்றும் ருஃயா (ஆன்மீகக் காட்சிகள்) அதிகமாக வருகிறது எனக் கூறினார்கள். இதிலிருந்து அல்லாஹ் மக்களுக்கு கனவு மூலமாக விஷயத்தை எட்ட வைக்க விரும்புகின்றான் என்பது தெரிய வருகின்றது. இறைவனுடைய மலக்குகள் வானத்தில் வெட்டுக்கிளியைப் போன்று சுற்றி வருகின்றார்கள். அவர்கள் உள்ளங்களில் ஏற்றுக் கொள்ளுங்கள். ஏற்றுக் கொள்ளுங்கள் என விஷயத்தை இடுகின்றனர்.

அடுத்து, மற்றொரு மனிதருடைய நிலையைக் கூறுகின்றார்கள். அவர் மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக நூல் எழுத எண்ணம் கொண்டிருந்தார். அவரது கனவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீ எதிராக எழுதுகின்றாயா? உண்மையில் மிர்ஸா உண்மையாளர் ஆவார். ஆக, நல்லியல்பு கொண்ட மக்களுக்கு இது இறைவனின் வழிகாட்டல் ஆகும். இன்று தப்லீகிற்கான வசதி அன்றைய காலத்தை விட மிக அதிகமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தை விட வசதி அதிகமாகும். இருந்த போதிலும் கனவு மற்றும் ஆன்மீகக் காட்சி மூலமாக இறைவனது வழிகாட்டல் கிடைப்பது, மக்களது உள்ளங்களை திறப்பதில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. யாருக்கு அல்லாஹ் விரும்புகின்றானோ அங்கு தப்லீகும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் அல்லாஹ் நேரடியாக நேர்வழிக்கான ஏற்பாட்டையும் செய்கின்றான். இன்றும் கூட எண்ணற்ற மக்கள் உள்ளனர். அவர்களுக்கு இவ்வாறு வழிகாட்டல் கிடைக்கின்றது. கிடைத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வாதத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அன்னாருடைய பைஅத்திலும் இணைகின்றனர். தற்போது நான் கடந்த வருடம் நடைபெற்ற இதுபோன்ற சம்பவங்களை எடுத்து வைப்பேன். இதில் அல்லாஹ் கனவு மூலமாக மக்களுக்கு வழிகாட்டி இருக்கின்றான். அவர்களுடைய விஷயங்களைக் கேட்டு ஏற்படுகின்றது. காதியானிலிருந்து ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள சில இடங்களில் தொடர்பு காண எந்த வகையான வசதியும் இல்லை. இருந்த போதிலும்

அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டுகின்றான்.

மொரீஷியஸிற்கு அருகில் ஒரு சிறிய தீவு மையூட்டே உள்ளது. அங்கு ஒரு முபல்லிக் சுற்றுப் பயணம் சென்றிருந்தார். அவர் கூறுகின்றார். அஹ்மதியல்லாத ஒரு நண்பர் கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்தார். அவருக்கு சில நாட்களுக்குப் பிறகு M.T.A பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. M.T.A –வில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய படத்தை பார்த்த உடனேயே நான் கனவில் பார்த்த பெரியவர் இவர் தான் எனக் கூறினார். இதன் மூலம் அவருக்கு அஹ்மதிய்யத் தான் உண்மை இஸ்லாம் என உறுதி ஏற்பட்டது. மேலும் அவருக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் தொடர்பாக சில விஷயங்கள் கூறப்பட்டது. பிறகு அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைத்து விட்டார்.

இதனைப் போன்று ஆப்பிரிக்காவில் தொலை தூரத்தில் கினி கினாக்கிரி என்ற ஒரு நாடு உள்ளது. அங்குள்ள பல்கலைக்கழகத்தின் மாணவர் சுலைமான் என்பவர் இருந்தார். அவர் நீண்ட காலமாக தப்லீகின் கீழ் இருந்து வந்தார். ஆனால் அவர் பைஅத் செய்யவில்லை. ஒருநாள் அவர் வந்து, நான் திருப்தி அடைந்து விட்டேன் எனக் கூறினார். பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்றார். அப்போது அவரிடம் நீங்கள் எவ்வாறு திருப்தி அடைந்தீர்கள் எனக் கேட்டபோது, அவர் தனது ஒரு கனவைக் கூறினார். அதில் அவர் ஒரு படகில் பயணம் செய்கின்றார். அவரது படகிற்கு அருகில் மற்றொரு படகு மூழ்குகிறது. அதிலுள்ள பயணிகள் உதவிக்காக அழைக்கின்றனர். நாங்கள் அவருக்கு உதவி செய்கின்றோம். பிறகு அவர்கள் எங்களது படகில் பயணம் மேற்கொண்டார்கள். நாங்கள் எந்த மேஜையின் அருகில் அமர்ந்திருந்தோமோ அங்கு இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இருந்தார்கள். அவர் குடிப்பதற்கு கனவிலேயே பால் குவளையைக் கொடுத்தார்கள். அவர்கள் மேஜையின் அருகில் இருந்தார்கள். அருகில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருக்கின்றார். குடிப்பதற்கு பால் குவளையைத் தருகின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: நான் குடிப்பதற்கு பால் குவளையை வாங்கினேன். வயிறு நிரம்ப குடித்தேன். அதன் சுவை மிக உயர்ந்ததாகும். பிறகு எனது கண்கள் திறந்தன. அப்போது நான் வாழ்க்கைக்கு தேவையான பானம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் படகில் பயணம் செய்வது மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படகில் பயணம் செய்வது மற்றும் அன்னாருடைய பைஅத்தின் மூலமாகத்தான் கிடைக்க முடியும் என்பதனை புரிந்து கொண்டேன். பிறகு அவர் பைஅத் செய்தார்.

இதைப் போன்று வட ஆப்பிரிக்காவின் ஒரு நாடு தீனுஸ் ஆகும். இங்குள்ள ஒரு நண்பர் காதிர் சாஹிப் கூறுகின்றார். நான் ஜமாஅத்தின் தாக்கத்திற்கு ஆளாகியிருந்தேன். ஆனால் பைஅத் செய்வதன் பக்கம் எனது உள்ளம் செல்லவில்லை. பைஅத் செய்வதற்கு திருப்தி ஏற்படவில்லை. ஏனென்றால் அவர் இமாம் மஹ்தியை நபியாக ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. இதுவே அடிப்படை விஷயமாகும். இது புரிந்து விட்டால் அதாவது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதம் ஷரீஅத் இல்லாத நபியுடையதாகும். அன்னாருக்கு கிடைத்த அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய காரணத்தால் கிடைத்ததாகும். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதன் மூலம் பெருமானார் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதன் மூலமாக அல்லாஹ் இவ்வாறான அருள் செய்ய முடியும். வரக்கூடிய மஸீஹ் நபியின் அந்தஸ்துடன் தான் வர வேண்டியிருந்தது. எவ்வாறிருப்பினும் இவர் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. அவர் கூறுகின்றார்: பிறகு நான் மிர்ஸா குலாம் அஹ்மது தான் உண்மையான இமாம் மஹ்தி என இறைவன் எனக்கு தெரியப்படுத்தினால் மட்டுமே பைஅத் செய்வேன் என தீர்மானம் செய்தேன். இதற்கிடையில் நான் ஓர் அஹ்மதி நண்பருடன் பேசினேன். அப்போது அவர் ஒரு ஆதாரத்தைக் கொடுத்தார். அதில் இமாம் மஹ்தி கண்டறிந்த பிறகு யார் பைஅத் செய்ய மாட்டாரோ அவர் அறிவீனமான நிலையில் அறிவீனர்களின் மரணம் அடைவார் எனக் கூறினார். இந்த விஷயம் என் மீது மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் நான் இரவில் இஸ்திகாரே செய்தேன். கனவில் நான் திருக்குர்ஆன் படிப்பதாகக் கண்டேன். அதில் ஓரிடத்தில் நின்றேன். அங்கு இன்னீ அன்ஸுருக்க யா அஹ்மது என எழுதப்பட்டிருந்தது. இந்தக் கனவைக் கண்ட பிறகு நான் உடனேயே பைஅத் செய்து விட்டேன்.

அடுத்து மற்றொரு நாடு மாலி ஆகும். அங்குள்ள முபல்லிக் கூறுகின்றார். குலி பாலி சாஹிப் என்றவொரு சகோதரர் இருந்தார். அங்கு ஒரு சிறிய பகுதியில் வாழக்கூடியவர். அவர் வயது முதிர்ந்த மனிதர் ஆவார். டிசம்பர் 2014 –ல் அவருக்கு பைஅத் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர் கூறுகின்றார். 1964 –ல் அவர் ஐவரிகோஸ்டில் இருந்த போது ஒருநாள் அவர் கனவில் கண்டார். அதில் இரண்டு வெந்நிற மனிதர்கள் அவரிடம் வருகின்றனர். அவர்கள் இமாம் மஹ்தி வந்து விட்டார் எனக் கூறினர். அவரிடம் பைஅத் செய்யுங்கள் எனக் கூறினேன். கனவிற்குப் பிறகு நாட்கள் கடந்த பிறகு இராணுவத்தில் சேர்ந்தார். கனவும் மறந்து போனது. ஆனால் 2014 –ல் ஒருநாள் ரேடியோவை டியூன் செய்தபோது அஹ்மதிய்யா ரேடியோ அவருக்கு கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் நமது பல ரேடியோ சேனல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. அவர் இதனை கேட்க ஆரம்பித்ததும் இமாம் மஹ்தியின் வருகை தொடர்பாக கேட்டதும் அவர் கூறுகின்றார். எனது உள்ளத்தின் நிலை மாறி விட்டது. பிறகு கனவும் நினைவுக்கு வந்து விட்டது. அவர் அல்லாஹ்வுக்கு இலட்கோபலட்சம் நன்றியைத் தெரிவித்தார். அவரது மரணத்திற்கு முன்பு இமாம் மஹ்தியின் பைஅத்தின் கீழ் வருவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இதனைப் பற்றிய விஷயத்தை அல்லாஹ் அவருக்கு 50 வருடங்களுக்கு முன்பே கூறி விட்டான். நல்லியல்பு கொண்டவர்களை அல்லாஹ் வீணாக்க மாட்டான். ஒரு நீண்ட காலம் கடந்த பிறகும் கூட அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டியுள்ளான்.

அடுத்து சுவாஸிலேண்ட் என்றவொரு நாடு உள்ளது. தாஹிர் சாஹிப் என்றவோர் அஹ்மதி இளைஞர் சில நாட்களுக்கு முன்பு தான் பைஅத் செய்தார். அவர் இவ்வருடம் ரமலான் மாதத்தில் 27வது இரவில் கனவில் பார்த்தார். அதாவது நிலவு தனது முழு ஒளியுடன் பிரகாசிக்கின்றது. அது ஒரு பகலைப் போன்று இருந்தது. கனவிலேயே ஒரு சப்தம் வந்தது. இது நீ பெற்ற அந்த

பிரகாசம் ஆகும். இதனை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். இது மெல்ல மெல்ல சுவாஸிலேண்ட் முழுவதும் பரவி விடும். கனவிலேயே எனக்கு இந்த ஒளி என்பது அஹ்மதிய்யத் தான் என தெரிவிக்கப்பட்டது. இது மெல்ல மெல்ல நாடு முழுவதும் பரவி விடும் இன்ஷா அல்லாஹ். இந்தக் கனவிற்குப் பிறகு இந்த புதிய அஹ்மதி நண்பருக்கு அசாதாரணமான உறுதிப்பாடு ஏற்பட்டது.

அடுத்து மாலியிலிருந்து வேறொரு சம்பவம் உள்ளது. நான்த்தே போஹு என்ற இடத்தில் ஒரு பெரியவர் சயீத் சாஹிப் உள்ளார். அவர் அஹ்மதிய்யத்தைப் பற்றி கேள்விப்பட்டிருந்தார். அதனால் அவர் அஹ்மதிய்யத் தொடர்பாக திருப்தி பெற விரும்பினார். இதற்காக அவர் 40 நாட்கள் தியானம் செய்தார். அவர் கூறுகின்றார்: 21வது இரவில் அவர் கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் என்னையும் பார்த்துள்ளார். இருவரும் அவருடைய வீட்டிற்கு செல்கின்றோம். பிறகு அவரை தன்னுடன் வானத்திற்கு அழைத்துச் செல்கின்றோம். அவர் இந்தக் கனவைப் பார்த்த பிறகு எனக்கு திருப்தி ஏற்பட்டு விட்டது எனக் கூறினார். பிறகு அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். மக்கள், ஆப்பிரிக்கர்கள் சாதாணமாகவே அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விடுவர் எனக் கருதுகின்றனர். மாறாக அவர்களிடம் உண்மையை ஏற்றுக் கொள்ளும் தேடல் உள்ளது. இதனால் தான் அவர்கள் விஷயங்களைக் கேட்கின்றனர். பின்னர் ஆராய்கின்றனர். தற்பெருமை கொள்வதில்லை. அவர்களது இயல்பு நல்லதாக உள்ளது. எனவே இறைவன் அவர்களுக்கு வழிகாட்டுகின்றான். மார்க்கத்திற்காக அவர்களது உள்ளத்தில் ஒரு வேதனை இருந்தது. அதனால் தானே அவர் 40 நாட்கள் தியாகம் செய்ய நினைத்தார்.

மேலும் அல்லாஹ் இதனையும் கூறுவதற்காக அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட உண்மையாளர் ஆவார். மஸீஹ் மற்றும் மஹ்தி ஆவார் என்பதற்காக மட்டும் அல்ல. மாறாக, அன்னாருக்குப் பிறகு தொடங்கிய கிலாஃபத் அமைப்பும் அல்லாஹ்வினால் ஆதரவளிக்கப்பட்டதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நோக்கத்தைத் தொடரச் செய்யக் கூடியதாகும் என்பதற்காக கலீஃபாக்களையும் கனவில் காண்பித்து நேர்வழி காட்டுகின்றான்.

இந்த வகையில் நைஜீரியாவிலிருந்து ஒரு முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்கள்: முஹம்மது என்ற பெயரைக் கொண்ட ஒருவர் தனது ஒரு கனவை எடுத்துரைத்தார். அதில் அவர் கப்பலில் பயணம் செய்கின்றார். கப்பல் கடலின் நடுவில் சென்றடைந்ததும் திடீரென்று புயல் வந்து விட்டது. இதனால் கப்பல் மூழ்க ஆரம்பித்தது. தப்பிப்பதற்கான வழிவகைகள் அனைத்தும் அடைபட்டு விட்டன. அப்போது திடீரென்று ஒரு மனிதர் தனது கையை நீட்டி என்னை கரையின் பக்கம் கொண்டு வந்தார். எனக்கு அந்த இறை அடியார் யார் என்பது தெரியாது. சில நாட்களுக்குப் பிறகு இந்த முஹம்மது என்ற பெயரைக் கொண்ட நபருடைய தொடர்பு நமது ஜமாஅத்தின் ஒரு தாயியே இலல்லாஹ்வுடன் ஏற்பட்டது. தாயியே இலல்லாஹ் அந்த நபருக்கு M.T.A –வைக் காண்பித்தார். M.T.A –வில் அந்த நபர் எனது முகத்தைப் பார்த்ததும் இந்த இறை அடியார் தான் என்னை காப்பாற்றினார் எனக் கூறினார். இதன் மூலம் அவர் தனது குடும்பத்துடன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

அடுத்து எகிப்தைச் சேர்ந்த ஒரு நண்பர் இருக்கிறார். அவர் கூறுகின்றார்: நான் 2004–ல் கனவில் நான்காவது கலீஃபா அவர்கள் ஓரிடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடன் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அவர்கள் என்னைப் பார்த்து நீங்கள் இந்த விஷயத்தில் ஆராய வேண்டும் என்றார்கள். அப்போது எனக்கு அது புரியவில்லை. அதற்கு முன்பாக நான் அன்னாரை பார்த்ததுமில்லை. கனவிற்கு 4 வருடத்திற்குப் பிறகு நான் M.T.A –வைப் பார்த்தேன். பிறகு ஆராய ஆரம்பித்தேன். இவ்வாறு அல்லாஹ் எனக்கு நேர்வழியினை வழங்கினான்.

அவர் கூறுகின்றார்: நவம்பர் 1914 –ல் நான் பைஅத் செய்வதற்கு முன்பு கனவில் கண்டேன். அதில் நான் ஒரு பள்ளிவாசலில் நுழைகின்றேன். அது தொழுகையாளிகளால் நிரம்பி உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அங்கு அமர்ந்திருக்கின்றார்கள். மேலும் அன்னார் என் பக்கம் பார்க்கின்றார்கள். நான் அன்னாருடைய அருகில் செல்கின்றேன். பிறகு அன்னாருடைய இடத்தில் முதல் கலீஃபத்துல் மஸீஹ் இருக்கின்றார்கள். ஒரு குரல் இது அபூபக்கர் ஸித்தீக் ஆகும் எனக் கூறியது. நான் மேலும் அருகில் சென்றேன். அங்கு முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய இடத்தில் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் இருந்தார்கள். தாங்கள் என்னைப் பார்த்ததும் துஆவில் கலந்து கொண்டேன்.

அவர் கூறுகின்றார்: நான் இந்த கனவிற்கு விளக்கத்தை இவ்வாறு அதாவது துஆ, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது கலீஃபாக்களைப் பின்பற்றுவதன் அருளினாலேயே ஏற்றுக் கொள்ளப்படுகிறது எனப் புரிந்து கொண்டேன் என்றார். எனவே, இவர்கள் உண்மையைப் புரிந்து கொண்ட நற்பேறு பெற்ற மக்கள் ஆவார்கள். இவர்களது உள்ளத்தின் நிலையைப் பார்த்து அல்லாஹ் நேர்வழியினை வழங்கிக் கொண்டிருந்தான். வழங்கிக் கொண்டிருக்கிறான். மேலும் சில மக்களது கனவிலிருந்து எந்த அளவு தெளிவாக நேர்வழியினை காண்பிக்கின்றான் என்றால் மனிதன் வியந்து போய் விடுகின்றான். மேலும் யாரெல்லாம் தன்னை மார்க்கத்தின் அறிஞர்களாக கருதுகிறார்களோ அவர்களை அல்லாஹ் இந்த வழிகாட்டலிலிருந்து தடுத்து விடுகின்றான்.

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புதிய அஹ்மதிகளின் கூட்டத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அன்னார் அந்த மக்களிடம் அன்பினை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள். அதாவது, நீங்கள் மாபெரும் நற்பேற்றைப் பெற்றவர்கள் ஆவீர்கள். பெரிய பெரிய மவ்லவிகளுக்குக் கூட அல்லாஹ் நேர்வழிக்கான வாயிலை அடைத்து விட்டான். ஆனால் உங்களுக்காக திறந்துள்ளான். இறைவனது மாபெரும் கருணை உங்கள் மீதும் இருக்கின்றது. இங்கு உட்கார்ந்திருக்கக் கூடிய உலகில் பரந்துள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீது இருக்கின்றது. எனவே, அல்லாஹ் உங்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பினை வழங்கி இருக்கின்றான். எவ்வாறென்றால் நான் இதற்கு முன்பும் பலமுறை கூறியிருக்கின்றான். அதாவது நாமும் அல்லாஹ்வுடைய இந்த மாபெரும் கருணையை நினைவில் வைக்க வேண்டும்.

இதற்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணையக் கூடியவர்கள் தொடர்பாக கூறி வந்தார்கள். அதாவது, நமது ஜமாஅத்தையே நீங்கள் பாருங்கள். இவை அனைத்தும் எதிரிகளிடமிருந்து வந்தவர்கள் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் பைஅத் செய்யக் கூடியவர்கள் அவர்களிடமிருந்தே வருகின்றார்கள். அவர்களிடம் தகுதியும் நற்பேறும் இல்லையென்றால் பிறகு எவ்வாறு அங்கிருந்து விலகி வந்திருக்க முடியும்?

அன்னார் கூறுகின்றார்கள்: பைஅத் செய்யக் கூடியவர்களிடமிருந்து பல்வேறு கடிதங்கள் இவ்வாறானதாக வருகின்றன. அதாவது ஆரம்பத்தில் நான் ஏசிப்பேசி வந்தேன். தற்போது நான் தவஃப்பா செய்கின்றேன். என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன் என வருகிறது.

இன்றும் கூட பல்வேறு மக்கள் உள்ளனர். அவர்கள் எதிரிகளாய் இருந்த போது இதே போன்ற நிலைதான் இருந்தது. ஆனால் தற்போது விசுவாசத்தில் முன்னேறிக் கெண்டே செல்கின்றனர். பைஅத் செய்கின்றனர். பைஅத் செய்த பிறகு கலப்பற்ற தன்மையிலும் விசுவாசத்திலும் முன்னேறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இது இறைவனது ஜமாஅத்தின் அருளாகும். அது எதிரிகளுக்கு மத்தியில் வளர்கிறது. முன்னேற்றம் அடைகிறது. அவர்கள் பல பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டினார்கள். கொலை வழக்கை தொடர்ந்தனர். ஆனால் இறைவன் புறமிருந்து வரக்கூடிய வார்த்தைகள் வீணாவதில்லை. நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகின்றேன். இந்த ஜமாஅத் இறைவன் புறமிருந்து வந்ததாகும். இது மனிதனது கைகளால் மனிதனது திட்டங்களால் உருவாக்கப்பட்டதென்றால் மனிதனது திட்டங்களும், மனிதர்களது எதிர்ப்புகளுமே அதனை அழித்து விட்டிருக்கும். மனித திட்டத்திற்கு எதிரில் இது வளர்வது முன்னேற்றம் காண்பது போன்றவை இது இறைவன் புறமிருந்து வந்ததற்கு ஆதாரம் ஆகும்.

ஆக, எந்த அளவு நீங்கள் தனது நம்பிக்கையின் ஆற்றலை அதிகப்படுத்துவீர்களோ அதே அளவு உள்ளம் ஒளிமயமாகும். எந்த அளவு அஹ்மதிகளாகிய நீங்கள் குவ்வத்தே யகீன் நம்பிக்கையின் ஆற்றலை அதிகப்படுத்துவீர்களோ அதே அளவு உங்களது உள்ளமும் ஒளிமயமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகள் நிச்சயமாக இறைவனது வார்த்தைகளாகும். அவை அல்லாஹ்வின் ஆதரவை பெற்றவை ஆகும். மேலும் நாம் பார்க்கின்றோம். எதிரிகளுக்கு மத்தியில் இந்த ஜமாஅத் வளர்கிறது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் கூறியதைப் போன்று உள்ளத்தை ஒளிமயமாக்க நம்பிக்கையின் ஆற்றலை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. தனது ஈமானை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

ஆக, நம்மில் ஒவ்வொருவரும் தன்னை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. நமது நம்பிக்கையின் ஆற்றல் வளர்கிறதா? உள்ளம் ஒளிமயமாகிறதா? நமக்கு மார்க்கத்தின் பக்கம் ஆர்வம் இருக்கிறதா? நாம் இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படுகின்றோமா? நாம் நமது ஆன்மீக மற்றும் செயல்பாட்டின் நிலையை அதிகப்படுத்த முயற்சி செய்கின்றோமா? மக்கள் பல்வேறு சம்பவங்களை நாங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, புதிய அஹ்மதிகளாக இருக்கக்கூடியவர்கள் எங்களது ஆன்மீகம் எங்கிருந்து எங்கோ சென்று விட்டது என்று எழுதுகின்றனர். எங்களது தொழுகையின் தரம் மாறி விட்டது. எங்களது செயல்பாட்டில் எவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளது? என எழுதுகின்றனர். சில பெண்கள் தனது கணவனைக் குறித்து எழுதுகின்றார்கள். அதாவது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தனது கணவரது நடைமுறை முற்றிலும் மாறி விட்டது. ஆரம்பத்தில் குடும்பத்தில் சண்டை சச்சரவு, கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. அது இப்போது சாந்தி, நிம்மதியாக மாறி விட்டது. எவ்வாறு எந்த சிந்தனையுடன் புதிதாக ஜமாஅத்தில் இணையக் கூடியவர்கள் தனது மார்க்கம், மார்க்க நிலையை எந்த அளவு கடுமையுடன் சிந்திக்கின்றனர் என்பதை பாருங்கள். அவர்களது கவலையை பாருங்கள். அவர்களது மாற்றங்களை பாருங்கள். இந்த நிலை தான் நம்மில் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மார்க்க நிலையின் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை ஓதுங்கள். இறைவனிடத்தில் ஒருபோதும் அவநம்பிக்கை அடையாதீர்கள். நம்பிக்கையாளர் இறைவனிடமிருந்து ஒருபோதும் அவநம்பிக்கை அடைய மாட்டார். இது நிராகரிப்பவர்களின் பழக்கத்தில் இணைந்திருக்கின்றது. அவர்கள் இறைவனிடமிருந்து அவநம்பிக்கை அடைந்து விடுவார்கள். நமது இறைவன் அலா குல்லி ஷய்யின் கதீர் – எல்லாவற்றின் மீது ஆற்றல் பெற்றவனாவான். திருக்குர்ஆனின் மொழியாக்கத்தைப் படியுங்கள். தொழுகையை நிறுத்தி நிதானமாக தொழுங்கள். அதன் பொருளையும் புரியுங்கள். தனது மொழியிலும் துஆ செய்யுங்கள். திருக்குர்ஆனை ஒரு சாதாரண நூல் எனக் கருதி படிக்காதீர்கள். மாறாக, அதனை இறைவனது வார்த்தை எனப் புரிந்து படியுங்கள். தொழுகையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தொழுதார்களோ அதேபோன்று தொழுங்கள். இந்த வகையில் தனது தேவைகளை தனது வேண்டுதல்களை மஸ்னூன் அஸ்கார் அதாவது, சுன்னத்தான துஆக்களை செய்த பின்னர் தனது மொழியில் கண்டிப்பாக கேளுங்கள். இறைவனிடம் வேண்டுங்கள். தங்களது துஆக்களை தனது தேவைகளை தனது மொழியில் கேளுங்கள். ஸஜ்தாவில் கேளுங்கள். இதனால் எந்தப் பிரச்சனையும் இல்லை. இதனால் தொழுகை ஒருபோதும் வீணாகாது.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. நாம் இறைவனுடன் தொடர்பை வலுப்படுத்தக் கூடியவர்களாக ஆவோமாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தைப் புரியக் கூடியவர்களாக ஆவோமாக. மேலும் ஜமாஅத்தின் சிறந்த மற்றும் உறுதியான அங்கமாக ஆவோமாக. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனைகளை உலகில் பரப்பக் கூடியவர்களாக ஆவோமாக. அல்லாஹ்வின் அருள்களுக்கு எப்போதும் வாரிசாகிக் கொண்டே செல்வோமாக.